## மார்ச் - 12- தவக்கால இரண்டாம் ஞாயிறு

### ஆண்டவரே உமது பேரன்பு எங்கள் மீது இருப்பதாக – திபா 33: 22

---

### முதல் வாசகம்: தொடக்க நூல் 12: 1 – 4

ஆண்டவர் ஆபிராமை நோக்கி, "உன் நாட்டிலிருந்தும் உன் இனத்தவரிடமிருந்தும் உன் தந்தை வீட்டிலிருந்தும் புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் நாட்டிற்குச் செல். உன்னை நான் பெரிய இனமாக்குவேன் உனக்கு ஆசி வழங்குவேன். உன் பெயரை நான் சிறப்புறச் செய்வேன் நீயே ஆசியாக விளங்குவாய். உனக்கு ஆசி கூறுவோர்க்கு நான் ஆசி வழங்குவேன் உன்னைச் சபிப்போரை நானும் சபிப்பேன் உன் வழியாக மண்ணுலகின் மக்களினங்கள் அனைத்தும் ஆசிபெறும்" என்றார். ஆண்டவர் ஆபிராமுக்குக் கூறியபடியே அவர் புறப்பட்டுச் சென்றார். அவருடன் லோத்தும் சென்றார்.

**பதில்பாடல்:** ஆண்டவரே உமது பேரன்பு எங்கள் மீது இருப்பதாக

### இரண்டாம் வாசகம்: 2 திமோத்தி 1: 8 – 10

எனவே நம் ஆண்டவருக்கு நீ சான்று பகர்வதைக் குறித்தோ அவர் பொருட்டு நான் கைதியாக இருப்பதைக் குறித்தோ வெட்கமடையத் தேவை இல்லை கடவுளின் வல்லமைக்கேற்ப நற்செய்தியின் பொருட்டுத் துன்பத்தில் என்னுடன் பங்குகொள். அவர் நம் செயல்களை முன்னிட்டு அல்ல, காலங்களுக்கு முந்திய தமது தீர்மானத்தின்படி, கிறிஸ்து இயேசு வழியாக நமக்கு அளிக்கப்பட்ட அருளின்படி நம்மை மீட்டுள்ளார் நமக்குத் தூய அழைப்பு விடுத்துள்ளார். நம் மீட்பராகிய கிறிஸ்து இயேசு உலகில் தோன்றியதன்மூலம் இப்போது அருள் வெளிப்பட்டுள்ளது. அவர் சாவை அழித்து, அழியா வாழ்வை நற்செய்தியின் வழியாக ஒளிரச் செய்தார்.

### நற்செய்தி : மத்தேயு 17 : 1 – 9

அக்காலத்தில் இயேசு பேதுருவையும் யாக்கோபையும் அவர் சகோதரரான யோவானையும் ஓர் உயர்ந்த மலைக்குத் தனிமையாகக் கூட்டிக்கொண்டு போனார். அங்கே அவர்கள்முன் அவர் தோற்றம் மாறினார். அவரது முகம் கதிரவனைப் போல் ஒளிர்ந்தது. அவருடைய ஆடைகள் ஒளிபோன்று வெண்மையாயின. இதோ! மோசேயும் எலியாவும் அவர்களுக்கு முன் தோன்றி இயேசுவோடு உரையாடிக்கொண்டிருந்தனர். பேதுரு இயேசுவைப் பார்த்து, "ஆண்டவரே, நாம் இங்கேயே இருப்பது நல்லது. உமக்கு ஒன்றும் மோசேக்கு ஒன்றும் எலியாவுக்கு ஒன்றுமாக மூன்று கூடாரங்களை அமைக்கட்டுமா? இது உமக்கு விருப்பமா?" என்றார். அவர் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தபோது ஒளிமயமான மேகம் ஒன்று அவர்கள்மேல் நிழலிட்டது. அந்த மேகத்தினின்று, "என் அன்பார்ந்த மைந்தர் இவரே, இவர்பொருட்டு நான் பூரிப்படைகிறேன். இவருக்குச் செவிசாயுங்கள்" என்று ஒரு குரல் ஒலித்தது. அதைக் கேட்டதும் சீடர்கள் மிகவும் அஞ்சி முகங்குப்புற விழுந்தார்கள். இயேசு அவர்களிடம் வந்து அவர்களைத் தொட்டு, "எழுந்திருங்கள், அஞ்சாதீர்கள்" என்றார். அவர்கள் நிமிர்ந்து பார்த்தபோது இயேசு ஒருவரைத்தவிர வேறு எவரையும் காணவில்லை. அவர்கள் மலையிலிருந்து இறங்கிவந்தபோது இயேசு, "மானிட மகன் இறந்து உயிருடன் எழுப்பப்படும்வரை இக்காட்சியைப்பற்றி எவருக்கும் சொல்லக் கூடாது" என அவர்களுக்குக் கட்டளையிட்டார்.

**தியானம்:** "கானலை நீரென்று எண்ணிய மான்போல" இவ்வுலக அரசியல்வாதிகளதும், கதைகளை நம்பி வாழமுற்படும் எமக்கு இன்றைய வாசகங்கள் ஒரு நல்ல படிப்பினையைக் கற்றுத்தருகின்றன. இவ்வுலகில் மனிதர்களாகப் பிறந்ததன் பெரும்பேறான மறுவுலக வாழ்வை நாமடைய வேண்டுமென்பதே எமது பரலோக தகப்பனது விருப்பமாகும். அதற்கான ஆயத்தங்களை இத்தவக்காலத்தில் முன்னெடுப்போம். ஆண்டவர் இயேசுவின் உருமாற்றத்தினைப் போன்று நாமும் நித்தியத்தில் அவரைக் காணவேண்டும். எனவே, இறைமகன் இயேசுவின் இறை பிரசன்னத்தில் நித்தியமும் வாழ மாயக்கவர்ச்சிகள் நிறைந்த இவ்வுலக வாழ்வு நிலையற்றதென தவக்கால இரண்டாம் ஞாயிறு நற்செய்தி தெளிவுபடுத்துகின்றது. எமது பரலோக தகப்பன் ஆபிராமிடம் தமது மீட்பின் திட்டத்தையும், தமது வாக்குறுதியில் நம்பிக்கை வைப்போர் அடைய இருக்கின்ற நன்மைகளையும் "நான் உனக்குக் காண்பிக்கும் நாட்டிற்குச் செல். உன்னை நான் பெரிய இனமாக்குவேன். உன் வழியாக மக்களினங்கள் அனைத்தும் ஆசிபெறும்" (தொடக்க நூல் 12:2-3) என்று கூறுகிறார். அப்படியாயின், நாமும் ஆண்டவர் எமக்குக் காண்பித்த நாட்டில் குடியேறி ஆண்டவரது ஆசிகளைப் பெறுவோம் என அர்த்தம் கொள்ளலாமல்லவா. ஆயினும், ஆண்டவர் இயேசு எதிர்பார்க்கும் உருமாற்றம் எமது உள்ளங்களில் ஏற்பட்டுள்ளதா? எமது ஆண்டவர் "வாக்கு மாறாதவர்" என்பதனை புனித பவுலடிகள் "அவர் நம் செயல்களை முன்னிட்டு அல்ல காலங்களுக்கு முந்திய தமது தீர்மானத்தின்படி ….கிறிஸ்து இயேசு உலகில் தோன்றியதன் மூலம் … சாவை அழித்து அழியா வாழ்வை நற்செய்தியின் வழியாக ஒளிரச்செய்தார்" **(2திமோத்தேயு1:9-10)** என உறுதிப்படுத்துகின்றார். எமது பாவ நிலைகளுக்காக வருந்தி மன்னிப்புப் பெறுவோம். நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெற்று புது மனிதர்களாக உருமாறுவோம். இறைமகன் இயேசு மாட்சிமையோடு மீண்டும் வரும்போது அவரை எதிர்கொள்ள நாமும் தயார் நிலையில் இருப்போம். நம் ஒவ்வொருவருக்கும் நல்ல மரணம் கிடைத்தருள, எமது மரண வேளையின்போது இறைமகன் இயேசு எமக்குத் தீர்ப்பின் இறைவனாக வராது, எமது மீட்பின் இறைவனாக வரவேண்டுமென வரம் வேண்டுவோம்.